# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** ***(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)***

***பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் , இலண்டன்***

***தமிழாக்கம் : மவ்லவி W. அதாவுல் முஃனீ சாஹிப்***

**Sumary of the Friday Sermon - 11, July 2014 (Tamil)**

## ரமலானும் திருக்குர்ஆனும்

***தஷஹ்ஹுத் தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா பக்ராவின் 186வது வசனத்தை ஓதினார்கள் பிறகு அதன் பொருளைக் கூறினார்கள்.***

பொருள்:-

“ரமலான் மாதம் எல்லா மக்களுக்கும் மிகப்பெரும் நேர்வழியைக் காட்டுவதற்காக திருக்குர்ஆன் அருளப்பெற்ற மாதமாகும். மேலும் திருக்குரான் தெளிவான அடையாளங்களால் நேர்வழியை தெளிவான அடையாளங்களால் நேர்வழியை தெளிவாகக்கூடியதாகும் மேலும் உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவிக்கக்கூடியதாகவும் இறக்கப்பட்டுள்ளது. எனவே, உங்களில் அம்மாதத்தை காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ பயணியாகவோ இருப்பவர் மற்ற நாட்களில் எண்ணிக்கையை பூர்த்தி செய்ய வேண்டும் அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான், கடினத்தை (த்தர) விருபுவதில்லை நீங்கள் சுலபமான முறையில் எண்ணிக்கையை பூத்தி செய்யவும் அவன் உங்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய இந்த நேர்வழியில் அடிப்படையில் நீங்கள் அவனை பெருமை படுத்தவும்; நீங்கள் நன்றி செலுத்தவும் வேண்டும் என அவன் நாடுகிறான்.

திருக்குர்ஆனின் முக்கியத்துவம், அதன் படித்தரம், அதன் படி செயல்படுவதல் அவசியம் (எவ்வாறு செயல்பட வேண்டும்? எப்படி பட்டவர்களுக்கு இது வாழ்வை அளிக்கக்கூடியதாக இருக்கிறது? மனித வாழ்வில் அதன் தாக்கங்கள் யாவை? ஆக இது போன்ற பல விஷயங்களின் விளக்கத்தை அல்லாஹ் நமக்கு திருக்குரானில் அறிவிக்கிறான். நாம் அந்த மகத்துவமிக்க ஷரிஅத் நூலின் மீது அமல் செய்து நமது ஆன்மீக, மார்க்க மற்றும் பண்பாட்டின் முன்றேற்றத்திற்காக மட்டும் வழிவகுக்க வேண்டும் என்பதற்காக இல்லை. மாறாக பௌதீகமான முன்னேற்றம் அடைவற்காகவும்தான். மேலும் நான் ஓதிய இவ்வசனத்தில் ரமலான் மாதத்தோரு இணைந்து திருக்குர்ஆனின் அருள்களை ரமலானோடு தொடர்பு படுத்தி கூறியிருக்கிறான். மேலும் ரமலானின் முக்கியத்துவத்தை மேலும் அதிகமாக்கியிருக்கிறான்.

என்று கூறி இந்த

இறுதியான ஷரீஅத்; முழுமையான நூலின் தொரட்பு ரமலானோடு இருக்கிறது என்ரு தெரிவிக்கிறான், எவர் தனது ஈமனில் முன்னேற விரும்புகிறாரோ; எவர் இந்த இறுதியான முழுமையான நூலை ஷரீஅத்தை உலகில் பரப்ப விரும்புகிறாரோ; உலகிம் அதை அறிய வேண்டும் என விரும்புகிறாரோ; எவர் தன்னை முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் காலத்திற்கு கொண்டு செல்ல முயற்சி செய்ய விரும்புகிறேன்:-

எவர் இறை நெருக்கத்தைப் பெற முயற்சி செய்ய விருபுகிறாரோ; எவர் ஃபஇன்னீ கரீப என்ர ஓசையை கேட்க விருபுகிறாரோ ஆவர் ரமலான் மற்றும் திருக்குர்ஆனுக்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும். அவ்விரண்டின் தொடர்பை அறிய வேண்டும். மற்ற நாட்களிலும் மாதங்களிலும் தொலைவாக தெரியக்கூடிய அந்த வழிகள் இம்மாதத்தில் நெருக்கமாக்கபட்டுவிட்டன எனவே, ஒரு மூமினால் இம்மாதத்திலிருந்து எவ்வளவு அருள்களை பெற முடியுமோ பெற முயற்சி

செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களும், கூறியிருக்கிறார்கள்.

எனும் இந்த ஒரு வரியின் மூலமே ரமலானின் மகத்துவம் தெரியவருகிறது. மேலும் கூறுகிறார்கள்; இந்த மகத்துவம் காரண்மாக நோன்பின் நற்கூலியும் மிகவும் பெரியதும் மகத்துவம் மிக்கதும் ஆகும். ஆனால் எவர்கள் அந்த நோன்புகளுகும் திருக்குரானுக்கும் இருக்கக்கூடிய தொடர்பின் உரிமையை நிறைவேற்றுகிறார்களோ அவர்களுக்கு தான் அது கிடைக்கும் மேலும் அதன் உரிமையானது நோன்பு நோற்பதோடு திருக்குர்ஆனையும் படிப்பதாகும். திருக்குரானை படியுங்கள் அதன் மீது கவனம் செல்குத்துங்கள் அதன் விலரிரிவுறைகளை கேளுங்கள் அல்லது படியுங்கள். ஏனென்றால் எனக்கு தெரிந்தவரை நான் செஉதத்டில் தெரியவந்தது என்னவென்றா நம்மில் பலர் பெருந்தொகையினர் ரமலானில் கூட திருக்குர்ஆனின் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்வதில்லை முழுமையாக படிப்பதில்லை. அதாவது எந்த அளவு கவனத்துடன் படிக்க வேண்டுமோ அவ்வாறு படிப்பதில்லை. படித்தாலுங்கூட மனமில்லாமல் சிறிய அளவு படித்துவிட்டு விட்டு விடு கின்றனர். ஆக எவ்வாறிருப்பினும் இதன் புறம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

பிறகு

என்பதற்கு இந்த ஒரு அர்த்தமும் இருக்கிறது. அதாவது, இம்மாதத்தில் திருக்குரான் இறங்க ஆரம்பித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் இதையே அறிவிக்கிறார்கள்: "ஹஸ்ரத் ஜீப்ரீல் (அலை) எல்லா ஆண்டும் ரமலானில் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடன் அவ்வப்போது வரை இறங்கிய அதிஅதிகாரங்களை ஓதுவார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் மரணித்த ஆண்டு இரண்டு முறை ஓதினார்கள் முழு குர்ஆனையும் இரண்டு முறை ஓதினார்கள்."

எனவே ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்மாதிரியும் அல்லாஹ்வின் சிறப்பான விருப்பத்தின் கீழ் அவர்கள் செய்த இந்த வழிமுறையானது நாம் திருக்குர்ஆனை குறைந்தது ஒரு முறையாவது ஓதி முடிக்க வேண்டும் என நமக்கு கவனமூட்டுகிறது. நான் கூறியது போன்று இதன் மீது சாந்தியையும் செய்யுங்கள்.

அப்போழுதுதான் நாம்

(மக்களுக்கு நேர்வழி காட்டக்கூடியது) எனும் அல்லாஹ்வின் இவ்வழிகாட்டல் படி செயல்படுபவர்கள் ஆக முடியும்.

நாம் இதன் மீது சிந்தனை செய்யவோம், படிப்போம், புரிவோம் என்றால் இது எப்படிபட்டவர்களுக்கு நேர்வழி வழங்கக்கூடியது என்று நமக்கு தெரிய வரும். எவர்கள் இதிலிருந்து நேர்வழி பெற விரும்புகிறார்களோ அவர்களுக்கு இது நேர்வழி வழங்கக்கூடியதாக அமையும். நேர்வழி படிக்காமல், புரியாமல் கிடைக்காது.

எனவே! இது எப்படிப்பட்ட ஒரு ஒருமித்த மற்றும் முழுமையான நூல்லென்றால் இதற்கு இனையே இல்லை. இதில் அனைத்து விஷயங்களும் முழுமையான முறையில் கூறபட்டுவிட்டன. இது அனைத்து பழைய மார்க்கங்களின் பிழைகளை அகற்றிவிட்டது. பழைய வேதங்களின் குறைகளை பூத்தி செய்து விட்டது. இக்காலத்தில் நம்மை பிறக்க வைத்து, பின்னர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்பதற்கும் நல்வாய்ப்பு வழங்கியிருப்பதும் அல்லாஹ் நம்மீது செய்த கருணையாகும். மேலும் இந்த நல்வாய்பை வழங்கி அன்னார் (அலை) அவர்கள் மூலம் திருக்குர்ஆனின் முக்கியத்டுவத்தையும் ஞானத்தையும் அறியும் வழிமுறைகளையும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறான். திருக்குர்ஆனின் ஞானத்தின் பொக்கிஷத்தை அன்னார் நம்முன் வைத்திருக்கிறார்கள். அதன் சரியான ஞானம் அன்னாரின் நூல்களை படித்ததன் பின்னரே கிடைக்க முடியும். எவ்வாறிருப்பினும் தற்போது நான் திருக்குர்ஆனைப்பற்றிய அன்னாரின் சில மேற்கொள்களை எடுத்துறைபேன். அவற்றின் மூலம் திருக்குர்ஆனின் படித்தரம் பற்றியும் முக்கியத்துவம் பற்றியும் தெரிய வரும்.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:-

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குறித்து கூறப்பட்ட காத்தமுன் நபிய்யீன் என்னும் சொல் அவர்கள் மீது இறக்கப்பட்ட அந்த நூலும் கத்தமுல்குதுப் ஆகும் என்பதை குறிக்கிறது மேலும் இது இயல்பாகவே இச்சொல்லில் இருக்கிறாது.

மேலும் அனைத்து அற்புதங்களும் அதில் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. மேலும் உண்மையில் அந்த அற்புதங்கள் அதில் இருக்கின்றன. ஏனென்றால் இறை மறைக்கான பொதுவான ஒரு நியதி என்னவென்றால் எந்த அளவு தூய்மையான ஆற்றலும் முழுமையான அகமும் அந்த மனிதருக்கு இருக்கிறதோ அதே அளவு தூய்மையான ஆற்றலும் கம்பீரமும் அந்து மறைக்கும் இருக்கும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய்மையான ஆற்றலும் மற்றும் முழுமையான அகமும் மிகவும் உயர்ந்த படித்தரத்தில் இருந்தது. அதைவிட அதிகமாக எந்த மனிதரிலும் இதுவரை இருந்ததில்லை இனிமேல் இருக்கப்போவதுமில்லை. எனவே திருக்குர்ஆனும் முன்வந்த அனைத்து நூல்களையும் விட மற்ற வேதங்கள் சென்றடையாத படித்தரத்தையும் அந்தஸ்தையும் அடைந்திருக்கிறது. ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய ஆற்றல் எல்லோரைவிடவும் அதிகமாக இருந்தது. மேலும் சாகசங்களின் அனைத்து படித்தரங்களும் அன்னாருடன் முடிந்துவிட்டிருந்தன. மேலும் அன்னார் (ஸல்) உயர்ந்த படித்தரத்தின் எல்லையை அடைந்திருந்தார்கள். அந்த படித்தரத்தில் அவர்கள் மீது இறங்கிய திருக்குர்ஆனும் உன்னதமான அந்தஸ்தை அடைந்திருக்கிறது. எவ்வாறு நுபுவ்வத்தின் அனைத்து சாகசங்களும் அன்னார் மீது முடிந்து விட்டனவோ அவ்வாறே வேதங்களின் அற்புதங்கள் திருக்குர்ஆன் மீது முடிந்துவிட்டன. அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆக திகழ்ந்தாகள். அவர்களுக்கு அருளப்பட்ட மறை காத்தமுல் குதுபாக திகழ்கிறது. எந்த அளவு அந்தஸ்த்தும் படித்தரமும் இறை மறையில் இருக்க முடியுமோ அவை அனைத்தின் அடிப்படையிலும் அவர்களின் மறை எல்லையை அடைத்து விட்டிருக்கிறது. அதாவது சொல் வளத்தின் வகையிலும் சரி; கல்வியின் அடிப்படையிலும் சரி; கல்வியின் கனிகளை வழங்கும் விதத்திலும் சரி; ஆக எவ்வகையில் பார்த்தாலும் அவ்வகையில் திருக்குர்ஆனின் மகத்துவம் தென்படுகிறது. மேலும் அதன் அற்புதம் நிரூபணமாகிறது. மேலும் இதன் காரணமாகவே திருக்குர்ஆன் எந்தவொரு குறிப்பிட்ட விஷயத்திலும் இணையை கொண்டுவருமாறு வாதிட வில்லை மாறாக பொதுவான முறையில் இணையை கொண்டு வருமாறு சவால் விடுத்திருக்கிறது. அதாவது எவ்வகையில் வேண்டுமானாலும் போட்டியிடுங்கள். சொல் வளத்தின் அடிப்படையில் ஆனாலும் சரி அர்த்தத்தின் நோக்கத்தின் அடிப்படையிலும் சரி; போதனையின் அடிப்படையிலும் சரி; முன்னறிவிப்புகளின் அடிப்படையிலும் சரி மேலும் திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள மறைவானவற்றின் அடிப்படையிலும் சரி ஆக எவ்வகையில் பார்த்தாலும் இது அற்புதம் ஆகும்.

பிறகு திருக்குர்ஆனின் முக்கியத்துவத்தை எடுத்துறைத்தவாறு அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

நம்மிடம் திருக்குர்ஆன் இல்லாமல் ஹதீஸுகளின் இந்த ஒன்று திரட்டப்பட்ட ஒரு திரல் மட்டும் நம்பிக்கையின் கொள்கையின் பெருமிதமாக இருந்திருந்தால் நம்மால் வெட்கத்தின் காரணமாக பிற சமுதாயங்களுக்கு முகத்தை காட்டமுடியாமல் போயிருக்கும் கூறுகிறார்கள் நான் குர்ஆன் எனும் சொல்லைப்பற்றி சிந்தனை செய்து பார்த்தேன். அப்பொழுது எனக்கு தெரியவந்தது, இந்த அருள்மிகு சொல்லில் ஒரு அருமையான முன்னறிவிப்பு இருக்கிறது. அதாவது, இந்த குர்ஆனே படிப்பதற்கு உகந்த நூலாகும். மேலும் ஒரு காலத்தில் இன்னும் அதிகமாக படிப்பதற்கு உகந்த நூலாகிவிடும். அப்பொழுடு மற்ற நூல்களும் அதோடு படிக்கப்படும். அப்பொழுது இஸ்லாத்தின் கவுரவத்த்தை காப்பற்றுவதற்காக மற்றும் பொய்யை விரட்டியடிப்பதற்காக இந்த ஒரு நூலே படிப்பதற்கு உகந்ததாகும். ஃபுர்கான் என்ற சொல்லின் பொருளும் இதுவே ஆகும். அதாவது, இந்த நூல்மட்டும் தான் உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவிக்கக் கூடியதாக திகழும். மேலும் எந்த ஹதீஸ் புத்தகமோ அல்லது வேறு எந்த நூலானாலும் சரி இந்த தகுதியை பெற்றதாக இடுக்காது எனவே இப்போது அனைத்து நூல்களையும் விட்டுவிடுங்கள். இரவும் பகலும் இறை மறையை மட்டும் படியுங்கள். எவர் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்தாமல் இதர நூலின் பக்கம் குனிந்தவராக இருக்கிறாரோ அவர் மிகவும் நேர்மையற்றவராவார், நமது ஜமாஅத் திருக்குர்ஆனை படிப்பதிலும் அதில் சிந்தனை செய்வதிலும் ஈடுபடவேண்டும். ஹதீஸ்களின் ஈடு பாட்டை விட்டு

விடுங்கள். மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயம் என்னவென்றால் எந்த அளவுக்கு ஹதீதுகள் படிக்கவும் புரியவும் படுகின்றனவோ அந்த அளவு திருக்குர்ஆன் படிக்கப்படுவதோ புரியப்படுவதோ இல்லை. இப்போது திருக்குர்ஆனை கையில் எடுங்கள் வெற்றி உங்களுக்குதான்.

அந்த ஒளிக்கு முன் எந்த இருளும் நிக்க முடியாது.

பிறகு தனது ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு கூறுகிறார்கள்.

எனவே நீங்கள் விழிப்புடன் இருங்கள் இறை போதனைக்கும் திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கும் எதிராக ஒரு அடி கூட எடுக்காதீர்கள். நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறு கட்டளையை கூட அலட்சியப்படுத்துகிறாரோ அவர் மோட்சத்தின் கதவை தன் கையாலேயே தன் முன் மூடிவிடுகிறார். மேலும் உண்மையான மற்றும் முழுமையான வழிவகைகளை திருக்குர்ஆன் தான் திறந்திருக்கிறது. மற்ற அனைத்தும் அதன் நிழலாகும். எனவே நீங்கள் குர்ஆனை சிந்தனையுடன் படியுங்கள் மேலும் அதோடு மிகவும் அன்பு செலுத்துங்கள் நீங்கள் எவரிடமும் செலுத்தாத அளவு அன்பு செலுத்துங்கள். ஏனென்றால் எவாறு இறைவன் என்னை நோக்கி கூறுகிறானோ: அல்கைரு குல்லுஹீ ஃபில் குர்ஆன். அதாவது எல்லவகையான நன்மைகளும் திருக்குர்ஆனில் இருக்கின்றன. இதுதான் உண்மைஉயாகும். இதன் மீது மற்றவற்றிக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள் மீது அந்தோ பரிதாபம்! உங்கள் அனைத்து வெற்றி மற்றும் மோட்சத்திற்கான வேர் குர்ஆனில் இருக்கிறது. உங்களுடைய எந்தவொரு மார்க்க தேவையும் திருக்குர்ஆனில் குறிப்பிடப்படாமல் இல்லை. கியாமத் நாளன்று திருக்குரானே உங்கள் ஈமானுக்கு சான்றுபகரக்கூடியதாகவோ அல்லது பொய்ப்பிக்கக்கூடியதாகவோ இருக்கும்.

கூறுகிறார்கள்: திருக்குர்ஆனைத் தவிர வானத்தின் கீழ் வேறு எந்த நூலும் இல்லை. திருக்குர்ஆனால் நேரடியாக உங்களுக்கு நேர்வழி வழங்க முடியும். அது போன்று நேர்வழி வழங்கக்கூடிய வேறு எந்த நாளும் இல்லை. நீங்கள் திருக்குர்ஆனின் வழி சொல்லாதவரை அந்த மற்ற நூலில் திருக்குர்ஆனின் போதனை குறிப்பிடப்படாதவரை அதனால் உங்களுக்கு நேர்வழி வழங்க முடியாது. கூறுகிராா்கள் : அல்லாஹ் குர்ஆன் போன்ற ஒரு நூலை அருளி உங்கள் மீது பெரும் கருனை புரிந்திருக்குறான், நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உங்கள் முன் படிக்கப்பட்ட இந்த மறை கிறித்தவர்களுக்கு முன் படிக்கப்பட்டிருந்தால் அவர்கள் ஒரு போதும் அழிவுக்க்காளாகியிருக்கமாட்டார்கள். மேலும் உங்களுக்காக வழங்க்ழப்பட்ட இந்த அருளும் நேர்வழியும் தவ்ராத்துக்கு பதிலாக யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களின் சில பிரிவினர் கியாமத் நாளை மறுத்திருக்கமாட்டார்கள்.

எனவே, உங்களுக்கு வழங்கப்பட்ட இந்த அருளுக்கு மதிப்பளியுங்கள். இது மிஅவும் அழ்ழகிய அருளாகும். இது மிகப் பெரும் செல்வமாகும். திருக்குர்ஆன் இறங்காமலிருந்தால் இந்த முழு உலகமும் ஒரு அழகிய இறைச்சியை போலிருக்கும் பெரிய அழகிய சாதனையைப் போலிருந்திருக்கும். திருக்குர்ஆன் எப்படிப்பட்ட நூலென்றான் அதோடு ஒப்பிடும் பொழுது உலகின் அனைத்து வழிகாட்டல்களும் பயனற்றாவையாகும்.

பெரும்பாலான முஸ்லின்கள் திருக்குர்ஆனை விட்டிவிட்டார்கள் என்பது உண்மைதான். ஆயினும் டிருக்குர்ஆனின் ஒளிகளும், அருள்களும் அதன் தாக்கங்களும் என்றென்றும் உயிருள்ளவையு புதிதானவையாகவும் இருக்கும்.

எனவே நான் இப்பொழுது இதற்கு சான்றாக அனுப்பப்பட்டிருக்கிறேன், மேலும் அல்லாஹ் எப்பொழுதும் தத்தமது சமயத்தில் தனது அடியார்களை அதன் ஆதரவிற்காக அனுப்பிவைத்துள்ளான். ஏனென்றால் அவன் வாக்குறுதி அளித்திருக்கின்றான்

அதாவது, நாமே இந்த அறிவுடையை அதாவது குர்ஆனை இறக்கினோம். மேலும் நாமே இதன் பாதுகாவலர் ஆவோம்.

திருக்குர்ஆனை பாதுகாப்பதாக அல்லாஹ் கொடுத்த வாக்குறுதி தவ்ராத்தை குரித்தோ அல்லது வேறு எந்த நூலுக்காகவோ கொடுக்கவில்லை. எனவே அந்த நூல்களின் மனித சாமர்த்தியம் தன் வேலையை செய்தது. திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்கான மிகப்பெரும் வழி என்னவென்றால்

அதன் தாக்கங்களுக்கு நிரந்தரமாக சான்றுகள் கிடித்து கொண்டு இருக்கின்றன. யூதர்கள் தவ்ராத்தை முற்றிலுமாக விட்டுவிட்டதன் காரணமாக அவர்களில் எந்த தாக்கமும் ஆற்றலும் எஞ்சியிருக்கவில்லை. இது இவர்களின் மரணத்தை சுட்டிக்காட்டுகிறது. பிறகு மிகவும் வேதனையுடன் அன்னார் ஒரு அறிவுரை கூறினார்கள்:-

உங்களுக்காக ஒரு அவசியமான போதனை என்னவென்றால் திருக்குர்ஆனை கைவிடப்பட்ட ஒரு பொருளாக ஆக்கிவிடாதீர்கள். ஏனென்றால் இதிலேயே உங்கள் வாழ்வு இருக்கிறது எவர்கள் திருக்குர்ஆனுக்கு கண்ணியம் அளிப்பார்களோ அவர்கள் வானத்தில் கண்ணியப்படுத்தப்படுவார்ர்கள். எவர்கள் ஒவ்வொரு ஹதீஸின் மீதும் கூற்றின் மீதும் திருக்குர்ஆனை முன்மைப்பார்களோ அவர்கள் வானத்தில் மின்வைக்கப்படுவார்கள். மனித குலத்துக்கு வழிகாட்ட உலகில் வேறு எந்த நூலும் இல்லை திருக்குர்ஆனைத்தவிர மேலும் ஆதமின் சிபாரிசு செய்பவரும் இல்லை. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத்தவிர.

ஜும்மா தொழுகைக் பிறகு ஹுஸூர் அவர்கள் (அய்) M.T.A. வின் பணியாளர் கலீம் அஹ்மது வஸீம் சாஹிபின் ஜனாஸா ஹாஸிர் தொழிகையை தொழவைத்தார்கள் அன்னார் 6 ஜூலை மாரடைப்பினால் 54-வது வயதில் இயற்கை எய்தினார்கள். மற்றும் அமேரிக்காவை சார்ந்த மஆஸிம் ஐகீ பஷீருதீன் சாஹிபின் ஜனாஸா காயிப் தொழுகையையும் நிறைவேற்றினார்கள். அன்னார் 22 ஜூன் 2014 அன்று 85வது வயதில் இயற்கையை எய்தினார்கள். இனாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.